**FRONT**

# Secure கிறெடிட் கார்ட்
## விண்ணப்பப் படிவம்

---

**விண்ணப்ப வகை**

**உறுதிச்சீட்டுக் குறியீடு :** ______________________________

வீசா சிக்னேச்சர் ☐ பிளட்டினம் ☐

கோல்ட் ☐

உங்கள் விண்ணப்பத்தைத் தாதமின்றிச் செயற்படுத்துவதற்கு உதவியாக இவ் விண்ணப்பப் படிவத்தை (தெளிவான எழுத்துக்களில்) பூரணமாக நிரப்பவும்.

***எனக் குறியிடப்பட்ட இடங்கள் கட்டாயம் நிரப்பப்பட வேண்டும்.**

**தனிப்பட்ட விபரங்கள்**

நீங்கள் ஒரு HSBC தற்போதய வாடிக்கையாளரா? ☐ ஆம் ☐ இல்லை

ஆமெனின்,

வாடிக்கையாளர் இலக்கம்: ______________________________

உங்கள் அந்தஸ்து*: ☐ திரு. ☐ திருமதி ☐ செல்வி ☐ கலாநிதி

வேறெனின், குறிப்பிடவும்: ______________________________

உங்கள் முழுப் பெயர் *: ______________________________

______________________________

______________________________

(பிரதான பெயரின் கீழ் கோடிடவும்)

உங்கள் முன்னைய பெயர் *: ______________________________________________

(முன்னைய சட்டபூர்வ பெயர். உங்கள் வங்கி உறவுகளில் முன்னைய பெயர் பாவிக்கப்பட வேண்டுமாயின், பத்திரிகை அறிவித்தல் அல்லது விவாகச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

ஏனைய பெயர் *: ____________________________________________________________

(தற்போது பயன்படுத்தும் வேறேதும் சட்டபூர்வ பெயர்)

பிறந்த திகதி* திதி மாமா வவவவ

தேசிய இனம் *: _________________________ பிறந்த இடம்: ________________________

பால் *: ☐ ஆண் ☐ பெண்

கல்வி மட்டம் *: ☐ ஆரம்பநிலை ☐ இடைநிலை ☐ உயர்நிலை

☐ பட்டதாரி ☐ பட்டப்பின்படிப்பு

விவாக நிலை*: ☐ தனியாள் ☐ விவாகமானவர் ☐ தாரமிழந்தவர்

☐ விவாகரத்துப் பெற்றவர்

தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை*: ____________________________________________________________

தாயாரின் கன்னிப் பெயர்* : ____________________________________________________________________

(திருமணத்திற்கு முன் தாயாரின் குடும்பப் பெயர்)

(நீங்கள் தொலைபேசியில் பேசும்போது, உங்கள் அடையாளத்தை உறுதிசெய்ய இது எமக்கு உதவும்)

வசிப்பிட உரிமை*: ☐ தனிப்பட்ட வாடகை வீடு ☐ சொந்த வீடு

☐ அரச வாடகை வீடு ☐ அடைமானம் வைக்கப்பட்ட சொத்து

☐ பெற்றோரின் வீட்டில் வசித்தல் ☐ உத்தியோகபூர்வ வசிப்பிடம்

HSBC யில் உமது கிட்டிய குடும்பவுறுப்பினரொருவர் அல்லது உறவினர் பணிப்பாளராக அல்லது ஊழியராக உள்ளாரா?*

☐ ஆம் ☐ இல்லை

அலுவலரின் பெயர் *: ______________________________________________________

**உரிய கூட்டினுள் அடையாளமிடவும் (ஒன்றிற்கு மேற்பட்ட கூடுகளிலும் அடையாளமிடலாம்)**

| | |
|---|---|
| ஆரம்ப மற்றும் தற்போதய செல்வ அல்லது வருமான மூலவளம் | ☐ தொழில் சம்பாத்தியம் ☐ சொத்தொன்றின் விற்பனை (உதா.கார்)<br>☐ வியாபார வட்டி வருமானம் ☐ பரம்பரைச் சொத்து<br>☐ லொத்தர்/பரிசு வெற்றிப் பணம் ☐ தனிப்பட்ட சேமிப்பு<br>☐ முதலீட்டு வருமானம்/ முதலீட்டின் முதிர்ச்சி ☐ கலைப்பொருள் விற்பனை<br>☐ வேறு (குறிப்பிடவும்)…………………… |
| வங்கி உறவு தொடர்பில் பயன்படுத்தப்பட இருக்கும் பணத்தின் மூலவிடம் | ☐ பண வைப்பு<br>☐ காசோலை வைப்பு<br>☐ ஏனைய கணக்குகளிலிருந்து பரிமாற்றம்<br>☐ ஏனைய வங்கிகளிலிருந்து தந்திப் பரிமாற்றம்<br>☐ வேறு (குறிப்பிடவும்) ……………………. |
| பயன்படுத்தப்பட இருக்கும் சேவைகளின் வகைகள் | ☐ பொதுவான வங்கிச் சேவைகள் (உதா. பணம், காசோலை, தனிப்பட்ட இணையத்தள வங்கிச் சேவை முதலியன)<br>☐ முதலீடு<br>☐ கடன் சேவைகள் (உதா. கடன், கிறெடிட் கார்ட் முதலியன)<br>☐ பண அனுப்பீட்டுச் சேவைகள் (உதா. தந்திப் பரிமாற்றம், கோரல் வரைவு)<br>☐ வேறு (குறிப்பிடவும்) ……………………… |
| மீளளிப்பிற்கான மூலாதாரம்* | ☐ தொழில் சம்பாத்தியம் ☐ சொத்தொன்றின் விற்பனை (உதா.கார்)<br>☐ வியாபார வட்டி வருமானம் ☐ பரம்பரைச் சொத்து<br>☐ லொத்தர்/பரிசு வெற்றிப் பணம் ☐ தனிப்பட்ட சேமிப்பு<br>☐ முதலீட்டு வருமானம்/ முதலீட்டின் முதிர்ச்சி<br>☐ வேறு (குறிப்பிடவும்)……………………. |

**ஆளடையாள விபரங்கள்**

ஆளடையாள வகை*: ☐ தே.அ.அ. இல. ☐ கடவுச்சீட்டு

ஆளடையாள ஆவணத்தின் இலக்கம்*

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | |

(இலங்கைப் பிரஜைகளுக்கு தே.அ.அ. பிரதி கட்டாயமானது)

தேசிய பிரஜை அல்லாதவர்களுக்கு:

கடவுச்சீட்டெனின், அது காலாவதியாகும் திகதியைக் குறிப்பிடவும். திதி மாமா வவவவ

வீசா இலக்கம்: ______________________________________________________________

வீசா வகை: ________________________________________________________________

வீசா காலாவதியாகும் திகதி : திதி மாமா வவவவ

## முகவரி விபரங்கள் (நிரந்தர முகவரி)

முகவரி/வீதியின் பெயர் *: ____________________________________________________________

__________________________________________________________________________________

நகரின் பெயர் *: ____________________________________________________________________

__________________________________________________________________________________

## வசிப்பிட முகவரி

**நிரந்தர முகவரியிலிருந்து வசிப்பிட முகவரி மாறுபடுமாயின் அதனைக் குறிப்பிடவும்.**

முகவரி/வீதியின் பெயர் *: ____________________________________________________________

__________________________________________________________________________________

நகரின் பெயர் *: ____________________________________________________________________

__________________________________________________________________________________

இவ்விடத்தில் வசிக்கும் ஆண்டுகளும் மாதங்களும் *: ஆண்டுகள்: _____ மாதங்கள்: ______

## முன்னைய முகவரி விபரங்கள் (வசிப்பிட முகவரி)

(தற்போதய முகவரியில் வசிப்பது 3 வருடங்களுக்குக் குறைவெனின், முன்னைய வசிப்பிட முகவரி தெரிவிக்கப்பட வேண்டும்)

முகவரி/வீதியின் பெயர் *: ____________________________________________________________

__________________________________________________________________________________

__________________________________________________________________________________

நகரின் பெயர் *: ____________________________________________________________________

**தொடர்பு விபரங்கள்**

வசிப்பிடத் தொலைபேசி இலக்கம்* : ______________________________

அலுவலகத் தொலைபேசி இலக்கம்* : ______________ நீடிப்பு : __________

மொபைல் தொலைபேசி இலக்கம்* : ______________________________

தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரி* : ______________________________

**கடிதத் தொடர்பு முகவரி**

சகல கடிதங்களும் அனுப்பட வேண்டியது*: ☐ எனது வசிப்பிட முகவரிக்கு

☐ எனது அலுவலக முகவரிக்கு

(HSBCஇல் பேணப்படும் சகல கிறெடிட் கார்ட்கள் தொடர்பிலும் மேற்குறிப்பிட்ட முகவரியே கடிதத் தொடர்பு முகவரியாகப் பயன்படுத்தப்படும்)

**கிறெடிட் கார்ட் விபரக்கூற்றுகள்**

காகிதப் பாவனையற்ற சூழலைப் பேணுவதற்காக 50,000க்கு மேற்பட்ட வாடிக்கையாளர்கள் இலத்திரனியல் விபரக்கூற்றுக்களைப் பயன்படுத்துகின்றனர். இலத்திரனியல் விபரக்கூற்றுக்களைப் பெறுவதன் மூலம் நீங்களும் இச் சாதகமான மாற்றத்திற்கு உதவலாம்.

☐ இலத்திரனியல் விபரக்கூற்றுக்களுக்காகப் பதிவு செய்வதன் மூலம் காகிதப் பாவனையற்ற சூழலைப் பேணுவதற்கு உதவ நான் விரும்புகிறேன். எனது கிறெடிட் கார்ட் இலத்திரனியல் விபரக்கூற்றைக் கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

☐ நான் காகித விபரக்கூற்றுக்களைப் பெற விரும்புகிறேன். எனது கிறெடிட் கார்ட் விபரக்கூற்றுக்களை எனது கடிதத் தொடர்பு முகவரிக்கு அனுப்பவும்.

**தொழில் விபரங்கள்**

தொழில் அந்தஸ்து*: ☐ முழு நேரம் ☐ பகுதி நேரம்

☐ தகுதிகாண் நிலை ☐ சுயதொழில்

☐ தொழில் செய்யாதவர் ☐ ஓய்வு பெற்றவர்
☐ இல்லத்தரசி ☐ மாணவர்

செய்யும் வேலை*: ____________________

**தொழில் வகை/வியாபாரத்தின் தன்மை*:**

| | | |
|---|---|---|
| ☐ ஆயுதச் சேவைகள் | ☐ பயணத்துறை | ☐ விமான சேவை |
| ☐ வங்கியியல்/நிதி | ☐ வர்த்தகம் | ☐ நிபுணத்துவ சேவைகள் |
| ☐ ஆடை தயாரிப்பு | ☐ தகவல் தொழில்நுட்பம் | ☐ பல்கூட்டுத் தொழில் |
| ☐ அரசாங்க சேவை | ☐ தொலைத்தொடர்பு | ☐ பெருந்தோட்டத் தொழில் |
| ☐ ஹொட்டேல் | ☐ மருத்துவம் | ☐ கப்பற் சரக்கு/கப்பற் சேவை |
| ☐ காப்புறுதி | ☐ கட்டுமானத்துறை | ☐ NGO/NPO/தருமபணி |
| ☐ ஏற்றுமதி/இறக்குமதி | ☐ பொதுவசதிகள் | ☐ உற்பத்தித் தொழில் |
| ☐ விளம்பரத்துறை | ☐ வேறு | |

வேறு எனின், எதுவெனக் குறிப்பிடவும் ____________________

கம்பனியின் பெயர்*: ____________________

சேவைக் காலம்*: ஆண்டுகள் ____________ மாதங்கள் ____________

பதவி/தொழிற் பெயர்*: ____________________

வருடாந்த வருமானம்*: ____________________
(அடிப்படைச் சம்பளமும் நிலையான படிகளும்)

மாறுபடும் படிகள்*: ____________________
(ஊக்குவிப்புக்கள் மற்றும் விற்பனைத் தரகுப்பணம்)

ஏனைய வருமானம்: ____________________
(சம்பளம் தவிர்ந்த ஏனைய வருமானம்)

ஏனைய வருமான மூலங்கள்:

☐ தொழில்மூல சம்பாத்தியம் ☐ வியாபாரமூல சம்பாத்தியம்
☐ முதலீட்டு வருமானம் ☐ வைப்பிலிருந்து வட்டி வருமானம்

ஏனையவை (குறிப்பிடவும்) ____________________________________________

முன்னைய தொழில் வழங்குநரின் பெயர்*: __________________________________

(தற்போதய தொழிலில் சேவைக் காலம் 2 வருடங்களுக்குக் குறைவெனின், முன்னைய தொழில் வழங்குநரின் பெயரைக் குறிப்பிட வேண்டும்)

சேவைக் காலம் (முன்னைய தொழில் வழங்குநரிடம்)*: ________________________________

(தற்போதய தொழிலில் சேவைக் காலம் 2 வருடங்களுக்குக் குறைவெனின், முன்னைய தொழில் வழங்குநரிடம் வேலைசெய்த காலத்தைக் குறிப்பிட வேண்டும்)

### அலுவலக முகவரி

முகவரி/வீதியின் பெயர்*: _______________________________________________________

_____________________________________________________________________________

நகரின் பெயர்*: ________________________________________________________________

### வகைப்படுத்தல்

நான் அல்லது எனது குடும்ப அங்கத்தவர் ஒருவர் அல்லது வியாபாரத் தொடர்பாளி / வியாபாரத் பங்காளி ஒருவர் (அரசாங்க, நீதி பரிபாலன், பொலிஸ் அல்லது படைத்துறையில்) சிரேஷ்ட பொதுநிலைப் பதவியை வகிக்கிறேனா (வகிக்கிறார்?) *

☐ ஆம் ☐ இல்லை

ஆமெனின், தயவுசெய்து உறவின் தன்மையை விபரிக்கவும்*____________________________________

### உசாவுநர்கள்

**உங்களுடன் வசிக்காத உறவினர்/நண்பர் ஒருவர்**

உசாவுநரின் பெயர்*: ___________________________________________________________

உசாவுநருடனான உறவுமுறை*: ____________________________________________________

உசாவுநரின் தொலைபேசி இலக்கம்*: _______________________________________________

உசாவுநரின் முகவரி*: __________________________________________________________

### நிதிசார் தொடர்புகள்

உங்களுக்கு வேறு வங்கிகளில் கணக்குகள்/கடன் வசதிகள்/கிறெடிட் கார்ட்கள் உள்ளனவா?*

☐ ஆம் ☐ இல்லை

**நிதிசார் தொடர்பு - நடைமுறை/சேமிப்பு/நிலையான வைப்பு**

| வங்கியின் பெயர் | கணக்கு இல. | கணக்கு வகை | எப்போதிருந்து |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

**நிதிசார் தொடர்பு - கடன் வசதிகள்**

| நிதி நிறுவனம் | கடன் வகை | மாதாந்த மீளளிப்பு |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

**நிதிசார் தொடர்பு - வைத்திருக்கும் கிறெடிட்/டெபிற் கார்ட்கள்**

| வழங்குநரின் பெயர் | கார்ட் இல. | கடன் உச்சவரம்பு | எப்போதிருந்து |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

## மேலதிக கார்ட்டிற்கான வேண்டுகோள்

மேலதிக கார்ட்டிற்கான விண்ணப்பதாரர், பிரதான கார்ட் வைத்திருப்பவரின் குடும்ப அங்கத்தவராகவும் குறைந்தபட்சம் 18 வயதுடையவராகவும் இருக்க வேண்டும்.

உங்களுக்கு ஒரு மேலதிக கிறெடிட் கார்ட் தேவையா? ☐ ஆம் ☐ இல்லை

**மேலதிக கார்ட் - தனிப்பட்ட விபரங்கள்**

நீங்கள் தற்போது ஒரு HSBC வாடிக்கையாளரா? ☐ ஆம் ☐ இல்லை

ஆமெனின்,

வாடிக்கையாளர் இலக்கம்: ____________________________________________

அந்தஸ்து*: ☐ திரு. ☐ திருமதி ☐ செல்வி ☐ கலாநிதி

வேறெனின் குறிப்பிடவும்: ____________________________________________

உங்கள் முழுப் பெயர்*: ____________________________________________

______________________________________________________________

______________________________________________________________

(பிரதான பெயரின் கீழ் கோடிடவும்)

உங்கள் முன்னைய பெயர்*: ______________________________________________

(முன்னைய சட்டபூர்வ பெயர். உங்கள் வங்கி உறவுகளில் முன்னைய பெயர் பாவிக்கப்பட வேண்டுமாயின், பத்திரிகை அறிவித்தல் அல்லது விவாகச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

ஏனைய பெயர் *: ______________________________________________

(தற்போது பயன்படுத்தும் வேறேதும் சட்டபூர்வ பெயர்)

மேலதிக கார்ட்டில் இருக்க வேண்டிய பெயர்*:

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | |

(இடைவெளிகள் உட்பட ஆகக்கூடுதலாக 19 எழுத்துக்கள்)

பிரதான விண்ணப்பதாரருடனான உறவுமுறை*: ______________________________________________

பிறந்த திகதி* திதி மாமா வவவவ

தேசிய இனம் *: ______________________ பிறந்த இடம் ______________________

பால் *: ☐ ஆண் ☐ பெண்

தாயாரின் கன்னிப் பெயர்*: ______________________________________________

(திருமணத்திற்கு முன் தாயாரின் குடும்பப் பெயர்)

(நீங்கள் தொலைபேசியில் பேசும்போது, உங்கள் அடையாளத்தை உறுதிசெய்ய இது எமக்கு உதவும்)

HSBC யில் உமது கிட்டிய குடும்பவுறுப்பினரொருவர் அல்லது உறவினர் பணிப்பாளராக அல்லது ஊழியராக உள்ளாரா?*

☐ ஆம் ☐ இல்லை

அலுவலரின் பெயர் : ______________________________________________

**நீங்கள் அல்லது உங்கள் குடும்ப அங்கத்தவர் ஒருவர் சிரேஷ்ட அரசாங்க அதிகாரியா (அரச, நீதி பரிபாலன, பொலிஸ் அல்லது இராணுவ சேவை)? *☐ ஆம் ☐ இல்லை**

ஆமெனின், உறவுமுறையின் தன்மையை விபரிக்கவும்*: ______________________________

## மேலதிக கார்ட் ஆளடையாள விபரங்கள்

ஆளடையாள வகை*: ☐ தே.அ.அ. இல. ☐ கடவுச்சீட்டு

ஆளடையாள ஆவணத்தின் இலக்கம்*

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | |

(இலங்கைப் பிரஜைகளுக்கு தே.அ.அட்டை பிரதி கட்டாயமானது)

தேசிய பிரஜை அல்லாதவர்களுக்கு:

கடவுச்சீட்டெனின், அது காலாவதியாகும் திகதியைக் குறிப்பிடவும். திதி மாமா வவவவ

வீசா இலக்கம்: ____________________

வீசா வகை: ____________________

வீசா காலாவதியாகும் திகதி: திதி மாமா வவவவ

**முகவரி விபரங்கள் (நிரந்தர முகவரி)**

மேலதிக கா்ட் விண்ணப்பதாரரின் நிரந்தர முகவரியும் பிரதான கா்ட் விண்ணப்பதாரரின் நிரந்தர முகவரியும் ஒன்றானதா? * ☐ ஆம் ☐ இல்லை

இல்லையெனின்,

முகவரி/வீதியின் பெயா்*: ____________________

____________________

____________________

நகரின் பெயா்*: ____________________

____________________

**மேலதிக கா்ட் விண்ணப்பதாரரின் வசிப்பிட முகவரி விபரங்கள்**

மேலதிக கா்ட் விண்ணப்பதாரரின் வசிப்பிட முகவரியும் பிரதான கா்ட் விண்ணப்பதாரரின் வசிப்பிட முகவரியும் ஒன்றானதா? * ☐ ஆம் ☐ இல்லை

மேலதிக கா்ட் விண்ணப்பதாரரின் வசிப்பிட முகவரியும் மேலதிக கா்ட் விண்ணப்பதாரரின் நிரந்தர முகவரியும் ஒன்றானதா? * ☐ ஆம் ☐ இல்லை

இல்லையெனின்,

நகரின் பெயா் *: ____________________

முகவரி *: ____________________

____________________

**மேலதிக கா்ட் விண்ணப்பதாரரின் தொடா்பு விபரங்கள்**

வசிப்பிடத் தொலைபேசி இலக்கம்* : ____________________

அலுவலகத் தொலைபேசி இலக்கம்* : ____________________ நீடிப்பு: ____________________

மொபைல் தொலைபேசி இலக்கம்* : ____________________

## மேலதிக கார்ட் விண்ணப்பதாரரின் தொழில் விபரங்கள்

தொழில் அந்தஸ்து*: ☐ முழு நேரம் ☐ பகுதி நேரம்

☐ தகுதிகாண் நிலை ☐ சுயதொழில் ☐ தொழில் செய்யாதவர்

☐ ஓய்வு பெற்றவர் ☐ இல்லத்தரசி ☐ மாணவர்

தொழில் *: ________________________________________________________________

நிறுவனத்தின் பெயர் *: ________________________________________________________

## பிரதான விண்ணப்பதாரரின் ஏனைய தொடர்புடைய தகவல்கள்

மாதாந்தக் கொடுக்கல் வாங்கல்களின் அண்ணளவான பெறுமதி: ______________________

பிரதான கிறெடிட் கார்ட்டில் இருக்க வேண்டிய பெயர்*:

| | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | |

(இடைவெளிகள் உட்பட ஆகக்கூடுதலாக 19 எழுத்துக்கள்)

## HSBC உடனான உங்கள் கணக்குடன் ATM மூலம் தொடர்புகொள்ளும் வசதி

எனது பின்வரும் கணக்குகளுடன் ATM மூலம் தொடர்புகொள்வதற்கும் எனது கார்ட்டைப் பயன்படுத்த விரும்புகிறேன்*. (ஆகக்கூடுதலாக 2 கணக்குகள்)

| கணக்கு வகை | பிரதான |
|---|---|
| நடைமுறைக் கணக்கு இல. | |
| சேமிப்புக் கணக்கு இல. | |

## கிறெடிட் கார்ட் தீர்ப்பனவு விருப்புரிமைகள்

எனது கார்ட் கணக்கைத் தீர்ப்பனவு செய்வதற்கு, பின்வருமாறு எனது HSBC கணக்கில் பற்று வைக்கவும்.

☐ ஆம் ☐ இல்லை

HSBC கணக்கு இலக்கம்: ☐☐☐ ☐☐☐☐☐☐ ☐☐☐

மாதாந்தத் தீர்ப்பனவு ............................................ % (5% - 100%)

உங்கள் கிறெடிட் கார்ட் மீதி பற்றி HSBC உங்களுக்கு SMS* மூலம் அறிவிக்க வேண்டுமா? (HSBC CC)

☐ ஆம் ☐ இல்லை

மொபைல் தொலைபேசி இலக்கம்(இலக்கங்கள்) : ____________________________________________

**கிறெடிட் கார்ட் மீதி இடமாற்றங்கள்**

உங்கள் ஏனைய வங்கிக் கிறெடிட் கார்ட் (OBC) மீதிகளை உங்கள் HSBC கிறெடிட் கார்ட் கணக்கிற்கு இடம்மாற்ற விரும்புகிறீர்களா? ☐ ஆம் ☐ இல்லை

கணக்கின் பெயர்: ____________________________________________

(கிறெடிட் கார்ட்டிலுள்ள பெயர்)

இடம்மாற்ற வேண்டிய தொகை: ____________________________________________

மற்றைய வங்கியின் பெயர்: ____________________________________________

மற்றைய வங்கிக் கிறெடிட் கார்ட் இலக்கம்: ____________________________________________

- ☐ விருப்பத்தேர்வு 1: 3 மாதங்களுக்கு 0%
- ☐ விருப்பத்தேர்வு 2: 6 மாதங்களுக்கு 1%

**கவனிக்கவும்:** கடைசி கிறெடிட் கார்ட் விபரக்கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலே வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்பதையும் எனது/எமது வெளிப்படையான வேண்டுகோளுக்கு இணங்கவும் எனது/எமது பூரண அறிவு, புரிந்துணர்வு மற்றும் சம்மதத்தின் பேரிலுமே ................................................ என்பவர் என்னால்/எம்மால் வழங்கப்பட்ட தகவல்களிலிருந்து படிவத்தை நிரப்பினார் என்பதையும் நான்/நாம் இத்தால் ஏற்றுக்கொள்கிறேன்/ஏற்றுக்கொள்கிறோம். மேற்குறிப்பிட்ட ................................... என்பவர் எனது/எமது வெளிப்படையான வேண்டுகோளுக்கு இணங்கவே படிவத்தை நிரப்பினால் என்பதையும் இந்த விண்ணப்பத்திலுள்ள தகவல்கள் தொடர்பில் ஏற்படக்கூடிய ஏதேனும் பொறுப்புக்களுக்கு அவரை அல்லது வங்கியைப் பொறுப்பாளியாக்க மாட்டேன்/மாட்டோம் என்பதையும் அறிக்கையிட்டு உறுதிப்படுத்துகிறேன்/ உறுதிப்படுத்துகிறோம். நான்/நாம் இந்த விண்ணப்பப் படிவத்திலுள்ள விடயங்களை வாசித்து விளங்கிக்கொள்டேன் /விளங்கிக்கொண்டோம் எனவும் எனது/எமது சுயவிருப்பின் பேரிலும் பூரண அறிவு மற்றும் புரிந்துணர்வுடனும் இப் படிவத்தில் கையொப்பம் இட்டேன்/இட்டோம் எனவும் இத்தால் அறிக்கையிடுகிறேன்/அறிக்கையிடுகிறோம்.

| | |
|---|---|
| ...................................................................... | ...................................................................... |
| பிரதான வாடிக்கையாளரின் கையொப்பம் | மேலதிக வாடிக்கையாளரின் கையொப்பம் |

**முக்கியம்**

வங்கியானது உங்கள் வருமானம், கொடுப்பனவு ஆற்றல் என்பவற்றைப் பரிசீலனை செய்து, அதன் பின்பு தனது சுய தீர்மானத்தின் பேரில் பொருத்தமானதொரு கிறெடிட் கார்ட்டை வழங்க பூரண உரிமை கொண்டுள்ளது.

இவ் விண்ணப்பப் படிவத்தைப் பூரணமாக நிரப்பவும். போதிய தகவல்கள் வழங்கப்படாவிட்டால், உங்கள் விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்வதில் தாமதம் ஏற்படலாம். பரிசீலனை அலுவல்களை விரைவாக்குவதற்கு உரிய ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்கவும்.

***சம்பளம் பெறுபவராயின்,***

- தே.அ.அ. அல்லது கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்தின் பிரதி.
- நிறுவன முத்திரை/அதிகாரபூர்வ கையொப்பம் சகிதம் (மிகக் கடைசியான) சம்பளச் சீட்டு.
- சம்பளத்தை (விபரங்களும் கழிவுகளும் வெவ்வேறாகக் குறிப்பிடப்பட வேண்டும்) உறுதிப்படுத்தி, தொழில் வழங்குநர் வழங்கிய கடிதம்.
- முகவரியை உறுதிப்படுத்துவதற்காக, வாடிக்கையாளரின் பெயரிலுள்ள சமீபத்திய (3 மாதங்களுக்கு உட்பட்ட) பொதுவசதிக் கட்டணப்பட்டியலின் பிரதி.

**மூல அல்லது பெறுமதிமிக்க ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டாம். ஏனெனில், விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால் அவை அழிக்கப்பட்டுவிடும்.**

***வெளிநாட்டவராயின்,***

- செல்லுபடியாகும் வதிவிட வீசாவின் பிரதி.
- கடவுச்சீட்டின் பிரதி.
- விண்ணப்பதாரரின் வருமானத்தைக் குறிப்பிடுவதுடன், அவர் நாட்டிலிருந்து வெளியேறினால் அல்லது அவரது ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டால் ஒரு மாதத்திற்கு முன்கூட்டி அறிவிக்கப்படும் என்ற வாக்குறுதியையும் அளித்து தொழில் வழங்குநரினால் வழங்கப்பட்ட கடிதம்.
- தொழில் ஒப்பந்தக் கடிதத்தின் பிரதி (கட்டாயமல்ல).

நீங்கள் 12 மாத நிலையான வைப்பு (குறைந்தபட்சம் ரூ.25,000) கணக்கொன்றை ஆரம்பிக்க வேண்டும். அதில் 90 சதவீதம் உங்கள் கடன் உச்சவரம்பாக வழங்கப்படும். வைப்பு மீளப் பெறப்படுமாயின், எஞ்சியுள்ள கிறெடிட் கார்ட் நிலுவை நிலையான வைப்பிற்கு எதிராக எதிரீடு செய்யப்படும்.

வருடாந்த மற்றும் சேர்வுக் கட்டணங்கள் உங்கள் கிறெடிட் கார்ட் கணக்கில் பற்று வைக்கப்படும்.

**விண்ணப்பத்தைச் செயற்படுத்துதல்**

உங்கள் விண்ணப்பம் (வங்கிக்குக் கிடைக்கப்பெற்றதும்), தேவையான சகல ஆவணங்களும் ஒழுங்காக இருக்கும் பட்சத்தில், அதனைப் பரிசீலிப்பதற்கு வழமையாகக் குறைந்தபட்சம் 10 வேலை நாட்கள் எடுக்கும்.

- ஏதேனும் மேலதிக ஆவணங்கள் தேவைப்பட்டால், நாம் உங்களுடன் தொடர்புகொள்வோம்.

- உங்கள் கிறெடிட் கார்ட் அங்கீகரிக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்டதும், அது நீங்கள் குறிப்பிட்ட முகவரிக்கு விநியோகிக்கப்படும்.

- நீங்கள் குறிப்பிட்ட முகவரிக்கு கார்ட்டை விநியோகிக்க முடியாதுபோனால், உங்களிடம் விசாரித்த பின், வேறொரு முகவரிக்கு நாம் அதனை விநியோகிக்க முடியும்.

## கால வைப்பின் மூலம் கிறெடிட் கார்ட்டிற்கு பிணையளிப்பதற்கான ஒப்பந்தம்

முகாமையாளர்,
ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட்
கொழும்பு 1.

அன்புள்ள ஐயா/அம்மணி,

**கால வைப்பின் மூலம் கிறெடிட் கார்ட்டிற்கு பிணையளிப்பதற்கான ஒப்பந்தம்**

உங்கள் முழுமையான தற்றுணிபின்படி, நீங்கள் காலத்துக்குக் காலம் முடிவுசெய்யக்கூடியவாறான அத்தகைய எல்லைகள் வரை, (இதனகத்துப் பின்னர் ''பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கிறெடெட் கார்ட்'' எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும்), ....................... ஆம் இலக்கத்தைக் கொண்டதும், வங்கியுடன் என்னால் பேணப்பட்டதும், கால வைப்பு கணக்கொன்றின் ரூபாய் ................................ (ரூ. ...........) மீதியின் மூலம் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டதுமான கிறெடிட் கார்ட் ஒன்றை எனது வெளிப்படையான வேண்டுகோளின் பேரில் நீங்கள் எனக்கு வழங்கியமையின் பிரதிபலனாக, கார்ட்டின் மீது வருமதியான எல்லாத் தொகைகளையும் வட்டியுடனும் இறுப்பனவுகளுடனும் செலுத்துவதற்கு நான் உடன்படுகின்றேன். மேலும், வங்கியாளர்கள் என்ற முறையில் நீங்கள் சட்டத்தினால் உரித்துடையோராகவிருக்கக்கூடிய ஏதேனும் பொதுவான சோந்தைக்கு அல்லது ஒத்த உரிமையுடன் சேர்த்தும் அதற்குப் பங்கமின்றியும், நீங்கள் எந்நேரத்திலும் எனக்கு அறிவித்தலின்றியும் மேலேயுள்ள எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எவற்றையும் இணைக்கலாம் அல்லது ஒன்றுதிரட்டலாம் என்றும், அத்தகைய கணக்குகளுள் ஏதேனும் ஒன்றின் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றின் வரவுக்கிருக்கும் ஒரு பணத்தொகையை அல்லது பணத்தொகைகளை, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கிறெடிட் கார்ட் கணக்கின்மீது நிலுவையாகவுள்ள ஏதேனும் தொகையைக் கொடுத்துத்தீர்ப்பதில் அல்லது கொடுத்துத்தீர்ப்பதற்கு எதிரீடுசெய்யலாம் அல்லது கைமாற்றலாம் என்றும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

என்னிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ள தொகை பற்றி வங்கியின் அலுவலரொருவரினாலான சான்றிதழொன்று, வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ள உள்ளபடியான தொகைபற்றி எல்லா நோக்கங்களுக்காகவும் போதியதும் முடிவானதுமான சான்றாதல் வேண்டும்.

உங்களின் வங்கிக்கான இவ்வதிகாரம் அழிக்கமுடியாததென்றும் உங்கள் சம்மதத்துடன் வெளிப்படையாக இல்லாதொழிக்கப்படும் வரை தொடர்ந்தும் முழு வலுவும் பயனும் கொண்டிருத்தல் வேண்டுமென்றும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடன் எந்த வைப்புக்கெதிராக வழங்கப்படுகின்றதோ, என்னால் இடப்பட்ட அந்த ஏதேனும் வைப்பு, கிறெடிட் கார்ட் இரத்துச் செய்யப்படும் பட்சத்தில், ஆகக்குறைந்தது 45 நாட்களுக்குப் பிடித்துவைக்கப்படுமென்பதை நான் முழுமையாகப் புரிந்துகொள்கின்றேன்.

என்னால் அல்லது உங்களால் நிறைவேற்றப்பட்ட அல்லது நிறைவேற்றப்படவுள்ள ஏதேனும் எழுத்திலான அல்லது வேறு வழியிலான சட்டத்தில் அல்லது ஒப்பந்தத்தில் அல்லது சாதனத்தில் முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், எனக்கு முன்னறிவித்தலின்றியும் என்னிடமிருந்து உங்களுக்கு வருமதியான பணங்களுக்காக என்மீது செய்யப்பட்ட ஏதேனும் முற்கோரிக்கையின்றியும், ஒதுக்கீட்டுரிமையைப் பிரயோகிப்பதற்கு உங்களுக்கு எந்நேரத்திலும் எல்லா நேரங்களிலும் தத்துவமும் அதிகாரமும் இருத்தல் வேண்டும்.

இந்த அதிகாரவளிப்பினதும் நட்டோத்தரவாதத்தினதும் நியதிகளுக்கிணங்க வங்கி செயலாற்றுவதன் பிரதிபயனாக, அத்தகைய விடயத்தின் தன்மையைப் பொருட்படுத்தாது எல்லா நேரங்களிலும் வங்கியினால் உறப்பட்ட அல்லது அடையப்பட்ட எல்லா நட்டங்கள், உரிமைக் கோரல்கள், வழக்குகள், சட்ட நடவடிக்கைகள், கோரிக்கைகள், சேதங்கள், செலவு தொகைகள் மற்றும் செலவுகள் என்பவற்றுக்கெதிராக வங்கிக்கு இழப்பெதிர்காப்பு அளிக்கவும் வங்கியை இழப்பெதிர்காப்பு அளிக்கப்பட்டதாக வைத்திருப்பதற்கும் கார்ட் வைத்திருப்பவர் இத்தால் பொறுப்பேற்கின்றார்.

நானும் எனது மரபுரிமையாளர்கள், நிறைவேற்றுநர்கள், நிருவாகிகள் என்போரும் இவ்வுடன்படிக்கையின் மூலம் பிணிக்கப்படுவதற்கு இத்தால் உடன்படுகின்றேன்.

இக்கடிதத்தில் தரப்பட்டுள்ள ஒழுங்கேற்பாடுகளின் செயற்படுத்துதல்கள் சம்பந்தமாக வங்கியினால் அவசியமெனக் கருதப்படுகின்ற கால வைப்புக்களின் அல்லது வேறெவையேனும் ஆவணங்களின் புதுப்பித்தல்களை எனது சார்பில் புறக்குறிப்பிடும் அல்லது நிறைவேற்றும் நோக்கத்துக்காகக் கூட்டாகவும் தனித்தனியாகவும் எனது அற்றோணிகளாகவும் அற்றோணியாகவும் இலங்கையிலுள்ள HSBC யின் அப்போதைக்கு நிறைவேற்றலுவலரொருவராக உள்ளவரை இத்தால் மேலும் பெயர்குறித்து, அமைத்து, நியமிக்கின்றேன்.

உங்கள் நம்பிக்கைக்குரிய,

வாடிக்கையாளரின் கையொப்பம்

கணக்கு இலக்கம் : ...................................................................

சாட்சி: (1) ...................................................................

பெயர்

முகவரி

தொழில்

சாட்சி: (2) ...................................................................

பெயர்

முகவரி

தொழில்

---

**வங்கியினால் நிரப்பப்பட வேண்டியது**

வங்கி அதிகாரியின் ஒப்பம்

கால வைப்புக் கணக்கு இலக்கம் ...................................................................

வைப்பின் பெறுமதி ...................................................................

கணக்கு ஆரம்பிக்கப்பட்ட திகதி ...................................................................

வைப்புக் காலம்

(12 மாதங்கள் மட்டும்) ...................................................................

## பிரகடனம்

இது ஹொங்கொங் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட்டுக்கு (இனிமேல் வங்கி என்று குறிப்பிடப்படும்) செய்யப்படும் பிரகடனமாகும். இலங்கையில் இந்த வங்கியினால் வழங்கப்படும் சகல HSBC கிறெடிட் கார்ட்(கள்) தொடர்பிலும் இப் பிரகடனம் செல்லுபடியாகும். இவ் விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையும் உண்மையானவையும் என்று நான்/நாம் உறுதியளிக்கிறேன்/உறுதியளிக்கிறோம். இத் தகவல்களை எந்த இடத்திலிருந்தும் விசாரித்து ஊர்ஜிதம் செய்துகொள்ள நான்/நாம் உங்களுக்கு அதிகாரம் அளிக்கிறேன்/அளிக்கிறோம். காலத்திற்குக் காலம் உங்களுக்குத் தேவைப்படக்கூடிய தகவல்களை என்னை/எங்களை கேட்காமலே உங்களுக்கு அல்லது உங்கள் பிரதிநிதிக்கு வெளியிட எனது/எங்களது வங்கியாளர்களுக்கும் ஏனைய தரப்பினருக்கும் அதிகாரம் அளிக்கிறேன்/அளிக்கிறோம். கணக்குத் தொடர்பில் சரியான புதிய தகவல்களையே வங்கி எப்போதும் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக, இந்த விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் மாறும் பட்சத்தில் அது பற்றி உடனடியாக வங்கிக்கு அறிவிக்க இணங்குகின்றேன்/இணங்குகின்றோம். நான்/நாம் விரும்பும் முகவரிக்கு விநியோகத்தை மேற்கொள்ள முடியாவிட்டால், எனது/எமது கடிதத் தொடர்பு முகவரியை வங்கி மாற்றக்கூடும் என்பதை நான்/நாம் அறிவேன்/அறிவோம். எனது/எங்களது பெயரில்/பெயர்களில் கணக்கொன்றை ஆரம்பிக்கும்படியும் நான்/நாம் வேண்டிக்கொள்ளும் பிரகாரம் கார்ட்டை/கார்ட்டுகளை வழங்கும்படியும் அக் கார்ட்டை/கார்ட்டுகளை காந்தப் பட்டியின் நடுவே இரண்டாகக் கிழித்துச் இரண்டு துண்டுகளையும் உங்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம் அதனை/அவற்றைப் பயன்படுத்தும் உரிமையை மீள ஒப்படைக்கும் வரை அதனை/அவற்றைப் புதுப்பித்துப் பதிலீடு செய்யும்படியும் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்/கேட்டுக்கொள்கிறோம். கிறெடிட் கார்ட் உரிமையாளர் ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகள், ATM, ATB, PIB மற்றும் ஏனைய கணக்குகள் தொடர்பாக வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள நிபந்தனைகள் என்பவற்றிற்கு அமைவாக மட்டுமே எனது/எங்கள் கிறெடிட் கார்ட்/கார்ட்களைப் பயன்படுத்த இணங்குகிறேன்/இணங்குகிறோம். அத்துடன், வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள கிறெடிட் கார்ட் உரிமையாளர் ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளவும் அவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்கவும் இணங்குகிறேன்/இணங்குகிறோம். இந்த விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, எனக்கு/எமக்கு கிறெடிட் கார்ட் அனுப்பப்படும்போது, விதிகள்,

நிபந்தனைகளை உள்ளடக்கிய பிரசுரத்தின் பிரதியொன்றும் அனுப்பப்படும். புதிய கிறெடிட் கார்ட்டைப் பயன்படுத்துவதன் மூலம் கார்ட் வைத்திருப்பவர் அது தொடர்பான விதிகளையும் நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்டுள்ளார் என்று வங்கியினால் விளங்கிக்கொள்ளப்படும் என்பதை நான்/நாம் ஒப்புக்கொள்கிறேன்/ஒப்புக்கொள்கிறோம். கார்ட்டின் பாவனையானது இந்த விதிகளும் நிபந்தனைகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பதற்கு அடையாளமாகும் என்பதை நான்/நாம் ஒப்புக்கொள்கிறேன்/ஒப்புக்கொள்கிறோம். உள்ளக கடன் ஊர்ஜிதப்படுத்தல், தற்போதுள்ள ஏதேனும் கிறெடிட் கார்ட்களின் உச்சவரம்புகள் மற்றும் பாவனை என்பவற்றிற்கு அமைவாகவே கிறெடிட் கார்ட் வழங்கப்படும் என்பதை நான்/நாம் ஏற்றுக்கொள்கிறேன்/ஏற்றுக்கொள்கிறோம். எனது கிறெடிட் கார்ட் கணக்கில் செய்யப்படும் பண வைப்புக்கள் அல்லது பண மாற்றங்கள் காரணமாகவோ, உச்சவரம்பின் தற்காலிக அதிகரிப்புக் காரணமாகவோ எனது முற்பண உச்சவரம்பு அதிகரிக்கப்பட மாட்டாது என்பதை நான்/நாம் அறிவேன்/அறிவோம். எனது/எமது வேண்டுகோளின் பேரில் வழங்கப்பட்ட பிரதான மற்றும் மேலதிக கார்ட்/கார்ட்களுக்கான சகல அறவீடுகளுக்கும் நான்/நாம் தனித்தனியாவும் கூட்டாகவும் பொறுப்பேற்க வேண்டும் என்பதை நான்/நாம் ஒப்புக்கொள்கிறேன்/ஒப்புக்கொள்கிறோம். கார்ட் விபரக்கூற்றுக்கள் அல்லது ஏனைய அறிவித்தல்கள் கிடைத்ததும், அவற்றைப் பரிசீலிப்பது எனது/எமது பொறுப்பாகும் எனவும் அதனைச் செய்வதற்கு நான்/நாம் தவறும் பட்சத்தில், ஏதேனும் தவறைக் கண்டுபிடிப்பதற்கான காலம் கடந்த பின்னர், எனக்கு/எமக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்புக்களுக்கு வங்கி பொறுப்பாகாது எனவும் ஏற்றுக்கொண்டு உறுதியளிக்கிறேன்/ உறுதியளிக்கிறோம். வெளிநாட்டில் வர்த்தக ரீதியில் பெருமளவு பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு அல்லது இலங்கையிலிருந்து மூலதனத்தை இடம்மாற்றுவதற்கு கிறெடிட் கார்டை நான்/நாம் பயன்படுத்த மாட்டேன்/மாட்டோம். எனது கிறெடிட் கார்ட்டின் பாவனை தொடர்பாக இலங்கையிலும் வெளிநாட்டிலும் ஒருசில ATM/வங்கி/கருமபீட வரையறைகள் இருக்கக்கூடும் என்பதை நான்/நாம் அறிவேன்/அறிவோம். நான்/நாம் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தால் அல்லது வெளிநாட்டுக்குத் தொழில்புரியச் சென்றால், எனது/எமது கிறெடிட் கார்ட்டை/கார்ட்களை வங்கியிடம் மீளளித்துவிட்டு, சகல நிலுவைகளையும் முழுமையாகச் செலுத்திவிடுவேன்/செலுத்திவிடுவோம் என்று உறுதியளிக்கிறேன்/உறுதியளிக்கிறோம். தேவையேற்படும் பட்சத்தில், மொத்தக் கடன் உச்சவரம்பு வரையிலான தொகையைப் பிடித்துவைக்கும் உரிமை வங்கிக்கு உள்ளதென நான்/நாம் ஏற்றுக்கொள்கிறேன்/ஏற்றுக்கொள்கிறோம்.

இது இலங்கை நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டாளருக்குச் செய்யப்படும் பிரகடனமாகும். இப் படிவத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் என்று நான்/நாம் உறுதியளிக்கிறேன்/உறுதியளிக்கிறோம். கார்ட் வழங்கிய வியாபாரியினால் (அதாவது வங்கியினால்) விதிக்கப்பட்ட உச்சவரம்பிற்குள் மாத்திரமே வெளிநாட்டில் எனது/எமது சர்வதேச இலத்திரனியல் பணமாற்றக் கார்ட்/கிறெடிட் கார்ட்/டெபிற் கார்ட் பயன்படுத்தப்படுமெனவும் பயணச் செலவு, ஹொட்டேல் கட்டணங்கள், எதிர்பாராத செலவுகள், மருத்துவச் செலவு, பாவனைக்கான பொருள்களை வாங்குதல் போன்ற தேவைகளுக்கு மாத்திரமே வெளிநாட்டில் கார்ட் பயன்படுத்தப்படுமெனவும் நான்/நாம் உறுதியளிக்கிறேன்/உறுதியளிக்கிறோம். மூலதனக் கொடுக்கல் வாங்கல்களுக்கு அல்லது வர்த்தக ரீதியில் பெருமளவு பொருள்களை கொள்வனவு செய்வதற்கு அல்லது இறக்குமதி செய்வதற்கு கிறெடிட் கார்டை நான்/நாம் பயன்படுத்த மாட்டேன்/மாட்டோம். மூன்றாம் நபரின் சார்பில் வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கலைச் செய்வதற்கும் இக் கார்ட்டை நான்/நாம் பயன்படுத்த மாட்டேன்/மாட்டோம். நான்/நாம் இலங்கையிலிருந்து குடிபெயர்ந்தால் அல்லது வெளிநாட்டுக்குத் தொழில்புரியச் சென்றால், எனது/எமது சர்வதேச இலத்திரனியல் பணமாற்றக் கார்ட்டை/கிறெடிட் கார்ட்டை/டெபிற் கார்ட்டை அதனை வழங்கிய வியாபாரியிடம் திருப்பிக் கொடுத்துவிட இணங்குகின்றேன்/இணங்குகின்றோம்.

| **அறவீடுகள்** | **சேர்வுக் கட்டணம்** | **வருடாந்தக் கட்டணம்** |
|---|---|---|
| பிரதான வீசா சிக்னேச்சர் | ரூ.2,500/- | ரூ.7,000/- |
| மேலதிக வீசா சிக்னேச்சர் | ரூ.1,500/- | ரூ.2,500/- |
| பிரதான பிளட்டினம் | ரூ.1,500/- | ரூ.3,850/- |
| மேலதிக பிளட்டினம் | ரூ.500/- | ரூ.1,500/- |
| பிரதான கோல்ட் | ரூ.750/- | ரூ.2,250/- |
| மேலதிக கோல்ட் | ரூ.300/- | ரூ.750/- |

மேற்குறிப்பிட்ட பிரகடனத்தை நான்/நாம் வாசித்து விளங்கிக்கொண்டு, ஏற்றுக்கொண்டு அதற்குக் கட்டுப்பட்டு நடக்க இணங்குகின்றேன்/இணங்குகின்றோம்.

நான்/நாம் இவ் விண்ணப்பத்தைச் செய்த நேரத்தில் வங்கியினால் வழங்கப்படும் கிறெடிட் கார்ட் வைத்திருப்பவர் ஒப்பந்தம் பற்றி எனக்கு/எமக்கு விளக்கப்பட்டன எனவும் அந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகளை நான்/நாம் முழுமையாக விளங்கிக்கொண்டேன்/ விளங்கிக்கொண்டோம் எனவும் அத்தகைய விதிகள் மற்றும் நிபந்தனைகள் www.hsbc.lkஎன்ற HSBC இணையத்தளத்தில் கிடைப்பதுடன் அவற்றின் பிரதியொன்றை வங்கியின் ஏதேனுமொரு கிளையிலிருந்து என்னால் /எம்மால் பெறமுடியுமென நான்/நாம் அறிந்துள்ளேன்/அறிந்துள்ளோம் எனவும் நான்/நாம் உறுதிப்படுத்துகின்றேன்/உறுதிப்படுத்துகின்றோம். மேற்குறிப்பிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கும் அவற்றினால் பிணிக்கப்படுவதற்கும் நான்/நாம் உடன்படுகின்றேன்/உடன்படுகின்றோம். இவ் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டதும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரதியொன்று எனது/எமது கிறெடிட் கார்ட்டுடன் சேர்த்து எனக்கு/எமக்கு அனுப்பப்படும்.

விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த வேளையில், வங்கி வசதிகள் மற்றும் சேவைகளின் தன்மை தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் விபரக்கொத்துக்களும் எனக்கு/எமக்கு வழங்கப்பட்டதுடன், அவை பற்றிய விளக்கமும் அளிக்கப்பட்டன என்பதையும் நான்/நாம் அவற்றை பூரணமாகப் புரிந்துகொண்டோம் என்பதையும் நான்/நாம் ஊர்ஜிதம் செய்கிறேன்/செய்கிறோம்.

இவ் விண்ணப்பப் படிவத்தில் நான்/நாம் தெரிவித்துள்ள தகவல்கள், என்னால்/எம்மால் நிரப்பப்பட்டிருந்தாலும் அல்லது எனது/எமது வேண்டுகோளின் பேரில், எனது/எமது முன்னிலையிலோ அல்லாமலோ, இன்னுமொரு தரப்பினரால் நிரப்பப்பட்டிருந்தாலும் என்னால்/எம்மால் வாசித்து விளங்கிக்கொள்ளப்பட்டன என்றும் நான்/நாம் கையொப்பமிடுவதற்கு முன்னர் படிவத்தில் நிரப்பப்படாத கட்டங்கள் யாவும் வெட்டிவிடப்படன என்றும் நான்/நாம உறுதியளிக்கிறேன்/உறுதியளிக்கிறோம்.

| | |
|---|---|
| ....................................................... | ................................ |
| பிரதான கார்ட் விண்ணப்பதாரர் | திகதி |
| ....................................................... | ................................ |
| மேலதிக கார்ட் விண்ணப்பதாரர் | திகதி |

**இலங்கை மத்திய வங்கி**

**இலத்திரனியல் பண மாற்ற அட்டைக்கான விண்ணப்பதாரரின் பிரகடனம்**

**நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டாளருக்கு**

(இலத்திரனியல் பண மாற்ற அட்டை (EFTC) மூலம் வெளிநாட்டு நாணயமாற்றைப் பெறுவதற்கு விணப்பதாரா்/கள் இதனை நிரப்ப வேண்டும்)

___________________________________ (பிரதான காா்ட் வைத்திருப்பவா் / மேலதிக காா்ட் வைத்திருப்பவா்) ___________________________________ (பிரதான காா்ட் வைத்திருப்பவா் / மேலதிக காா்ட் வைத்திருப்பவா்) ஆகிய நான்/நாம் கீழே என்னால்/எம்மால் தெரிவிக்கப்பட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானவையும் சரியானவையும் என்று உறுதியளிக்கிறேன்/உறுதியளிக்கிறோம்.

வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல்களுக்கு காா்ட்டைப் பயன்படுத்துவது தொடா்பாக, 2016 ஜனவரி 20ஆந் தேதிய 1950/40 ஆம் இலக்க அதிவிசேட வா்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நாணயப் பரிவா்த்தனைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நான்/நாம் அறிவோம் எனவும் அந்த நிபந்தனைகளுக்குப் பணிந்து நடக்க இணங்குகிறேன்/இணங்குகிறோம் எனவும் இத்தால் உறுதியளிக்கிறேன்/உறுதியளிக்கிறோம்.

எனக்கு/எமக்கு வழங்கப்பட்ட EFTC காா்ட்டைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடா்பில், நாணயப் பரிவா்த்தனைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் நோக்கத்திற்காக ஹொங்கொங் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட்டுக்கு ஏதேனும் தகவல் தேவைப்படின், அதனை வழங்க இணங்குகிறேன்/இணங்குகிறோம்.

இலங்கையிலிருந்து குடிபெயா்ந்தால் அல்லது வெளிநாட்டுக்குத் தொழில்புரியச் சென்றால், எனது/எமது EFTC காா்ட்டை ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட்டிடம் திருப்பிக் கொடுத்துவிட இணங்குகின்றேன்/இணங்குகின்றோம்.

எனக்கு/எமக்கு வழங்கப்பட்ட EFTC கார்ட்டைப் பயன்படுத்தி அனுமதியற்ற வெளிநாட்டு நாணயக் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதெனச் சந்தேகிப்பதற்கு நியாயமான ஆதாரங்கள் இருப்பின், EFTC கார்ட்டின் பேரில் வெளிநாட்டு நாணயம் வழங்குவதை இடைநிறுத்தும் தேவை அதிகாரம்பெற்ற வழங்குநருக்கு ஏற்படும் என்பதை நான்/நாம் அறிவேன்/அறிவோம்.

.......................................                ..................................................................

திகதி                பிரதான கார்ட் வைத்திருப்பவரின் ஒப்பம்

.......................................                ..................................................................

திகதி                மேலதிக கார்ட் வைத்திருப்பவரின் ஒப்பம்

## வங்கியின் பாவனைக்கு மட்டும்

___________________________ (அலுவலரின் பெயர்) ஆகிய நான் ___________________________ (கார்ட் வைத்திருப்பவரின் பெயர்) என்பவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் மற்றும் உரிய ஆவணங்களைக் கவனமாகப் பரிசீலித்து, அத் தகவல்களும் ஆவணங்களும் நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுத் தேவைகள் மற்றும் வங்கியின் உள்ளகக் கொள்கைகள் என்பவற்றிற்கு அமைவாகவே உள்ளன என்பதையிட்டுத் திருப்தியடைகிறேன். கார்ட் வைத்திருப்பவர் தனது EFTC யின் பேரில் மேற்கொள்ளும் வெளிநாட்டு நாணயமாற்றுக் கொடுக்கல் வாங்கல்கள் குறித்து விழிப்பாக இருக்கவும், கார்ட் வைத்திருப்பவர் வழங்கிய வாக்குறுதிக்கு முரணாக EFTC யின் பேரில் அனுமதியற்ற வெளிநாட்டு நாணயமாற்றுக் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றுள்ளதாகச் சந்தேகிப்பதற்கு நியாயமான ஆதாரங்கள் இருப்பின் EFTC யின் பேரில் வெளிநாட்டு நாணயமாற்று வழங்குவதை இடைநிறுத்தவும் இந்த விடயத்தை நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டாளரின் கவனத்திற்குக் கொண்டுவரவும் வங்கி இணங்குகின்றது.

________________________                ________________________________________

திதி மாமா வவவவ                வங்கியின் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்

தொடர்பு ID*:____________________________________________________________

( DSA மற்றும் ரெலி விற்பனை முகவருக்கு மட்டும்)

இந்த ஆவணத்தின் ஆங்கில அல்லது சிங்கள பிரதி உங்களுக்குத் தேவைப்படின், தயவுசெய்து www.hsbc.lk என்ற எமது இணையத்தளத்தை நாடவும் அல்லது எமது கிளையொன்றில் கேட்டுப் பெறவும்.

**CPD/SEC/APP/TAM /V-2016.3**

ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட், ஸ்ரீலங்காவின் வெளியீடு.